1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, தனியார் யாருக்குமே பேரூந்து உரிமங்கள் வழங்கப்படவில்லை. எனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் நாம் வழங்காமல் தனியாக நிறுத்திவிடவில்லை. ஒட்டுமொத்தமாகத் தனியாருக்கு ஒன்றரை ஆண்டுக் காலமாகக் கொடுக்கவில்லை. ஆகவே, 18 சதவீதம் கொடுக்க முடியாமல் இருந்தது. கொடுக்க ஆரம்பித்தால் அந்த வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும். எனவே, மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களுக்குக் கொடுக்காமல் நிறுத்தவில்லை. எல்லோருக்கும் கொடுக்காமல் நிறுத்தியிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுப் பேருந்துகள் பல்வேறு தடங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த வண்டிகளில் எதிலாவது, ஒரு டயர் பங்க்ச்சர் ஆனால், அந்த வண்டியை மறுமுறை எடுப்பதற்கு 4 அல்லது 5 மணி நேரம் ஆகின்றது. அதனால், ஒரு நாளே போய்விடுகிறது. ஆகவே, எல்லா வண்டிகளுக்கும் ஸ்டெப்னி டயர், ஜாக்கி, ஸ்பேனர் மூன்றும் கொடுக்க அரசு முன்வருமா? இப்பொழுது பெருத்த நட்டம் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த மூல வினா ஸ்பேர் பஸ்களைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் ஸ்பேர் பார்ட்ஸுக்குப்போய் விட்டார், அவ்வளவுதான்.

தமிழ்நாட்டில் உலகவங்கி மூலம் செயல்பட்டுவரும் நல்வாழ்வுத்துறைக்கான திட்டங்கள்.

*வினா எண். 319—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியின் மூலம் நல்வாழ்வுத் துறைக்கு ஏதாவது திட்டங்கள் உள்ளனவா?

(ஆ) அதன் செயல்முறை என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ), (ஆ) உலக வங்கியின் மூலம் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுவதில் நல்வாழ்வுத் துறையும் பங்கு ஏற்கிறது.

இத் திட்டம் 1980 நவம்பரிலிருந்து மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் முன்னோடித்திட்டமாக (Pilot Project) செயல்படுத்தப்பட்டுவருகிறது. இவ்வாண்

[1982 மார்ச் 2

றியத்தில் 66 சத்துணவு நிலையங்களும் (Communi.y Nutrition Cen es) 20 சுகாதார துணை நிலையங்களும் (Heal h Sub Cent e) அமைந்துள்ளன. இதற்கான பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் பல்வேறு பணிகள் ஆற்றிவருகின்றனர்.

திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 1981-82-ம் ஆண்டு இறுதியில் நிலக்கோட்டை ஒன்றியம் நீங்கலாக இங்கு ஒருங்கிணைந்து குழந்தை நலத்திட்டம் (In egra ed Child Developmen Service) நடைபெற்றுவருவதால்) மதுரை மாவட்டத்தில் எஞ்சியுள்ள 32 ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. தற்போது 361 சுகாதார துணை நிலையங்களும், 51 ஊரக சுகாதார பயிற்சி நிலையங்களும், 9 செவிலியர் பயிற்சி பள்ளிகளும் கட்டும் வேலைகள் நடந்துவருகின்றன.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தின் மொத்த மதிப்பீடு என்ன? என்ன என்ன திட்டங்கள், எந்த எந்த மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரே கேள்வியைச் சுலபமாக உறுப்பினர் கேட்டு விட்டார். எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற ஊர்களைப் படிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உண்டா என்று கேட்டுவிட்டுப் போகலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, உலக வங்கியின் சத்துணவுத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 55.78 கோடியாகும். இத்திட்டம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை வட ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வயது முதல் 10 வயதுவரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உணவு வழங்க முன்வந்துள்ள இந்த நல்ல அரசு, இந்தச் சத்துணவை எத்தனை வயதுள்ள குழந்தைகளுக்கு அளிக்க உள்ளது? என்ன வகையான உணவு என்பதை அரசு தெரிவிக்குமா? கர்ப்பிணிப் பெண்களுக்கு இது அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : சத்துணவுத் திட்டத்தின் கீழ் 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான நலிவுற்ற குழந்தைகள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. கர்ப்பிணித் தாய்மார்களும் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.